1967 ஜூலை 14]

இந்த இலாக்காவில்கூட எப்படிப்பட்டவர்கள் இருக்கவேண்டும் என்பதையும், அந்த அதிகாரிகளுக்கு நம்பிக்கை இருக்கிறதா என்பதையும், அதற்குப் பிறகு அந்த நம்பிக்கை எந்த அளவிற்கு இருக்கவேண்டுமென்ற அளவு கருவிகள் சரியாக இருக்கிறதா என்பதையும் காணவேண்டும். ஆகையால் அப்படியில்லாமல் பொதுவாக குறிப்பிட்ட இடத்தில் இன்னார் இருப்பதால் இன்ன தீங்கு வந்தது என்று சுட்டிக்காட்டப்பட்டால், அவரை நீக்கிவிட்டு அந்தப் பொறுப்பை செம்மையாக நிறைவேற்றுகிறவர் களிடம் கொடுப்பதற்கு முயற்சி எடுக்கலாம்.

திரு எஸ். இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, இந்தக் குழுக்கள் பூஜை நடத்துவதற்காகப் போடப்படுகிறதா ? கடவுள் நம்பிக்கை கட்டாயம் வேண்டுமென்று அரசு கருதுகிறதா ? மூற் பகல் 9–30

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, இந்தக் குழுக்களெல்லாம் என்ன நோக்கத்திற்காகக் கோவில்கள் அமைந் திருக்கின்றனவோ அந்த நோக்கங்கள் சரிவர, ஒழுங்காக ஈடேற, அந்தப் பணிகளைக் கண்காணிப்பதற்காக அமைக்கப்பட்டிருக்கின்றன.

* 325 வினா.—**திரு. கொ. இர. ஞானசம்பந்தன் :** மதிப்பிற்குரிய கல்வி–தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப் பாரா—

(அ) சென்னையில் உள்ள அறநிலைய ஆணையர் அலுவலகத்துடன் இணைத்திருக்கும் டிவிஷனல் இஞ்சினியர் வேலைகள் வரையறுக்கப் பட்டுள்ளதா ?

(இ) அவர் 1966–67-ம் ஆண்டில் எத்தனை ஆலயங்களில் நடை பெற்று வரும் கட்டுமான வேலைகளைப் பார்த்துள்ளார் ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம். ஆலயங்களைப் புதுப்பித்தல், பாதுகாத்தல் ஆகிய பணிகளை கோட்டப் பொறியாளர் மேற்பார்வையிட்டு செலவு மதிப்பீடுகளைப் பரிசிலனை செய்யவேண்டும்.

(இ) 76 ஆலயங்கள்.

திரு. கொ. இர. ஞானசம்பந்தன் : ஐயா, ஆலயங்களின் கட்டுமான வேலைகளைக் கவனிக்கத் தனியாக இருக்கிற பொறியியல் பகுதியை எடுத்து விட்டு, பொதுப்பணித் துறையோடு சேர்த்து கவனிக்கப்பட்டால். அது சீராகவும் சிக்கனமாகவும் இருக்கும். அதைப் பற்றி அரசு யோசிக்குமா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, இந்த பொறியியல் பகுதி 1963-ஆம் ஆண்டு அமைப்பது என்று முடிவு செய்து 1964-ம் ஆண்டில் அமைக்கப்பட்டது. அற நிலையத் துறையின் பாதுகாப்பில், 8,641 கோவில்கள் இருக்கின்றன. இவைகளிலே கிட்டத்தட்ட ஆயிரம் ஆண்டுகளுக்கு மேற்பட்டவைகள், 600, 700 ஆண்டுகளுக்கு மேற்பட்ட கோவில்களைப் பொறுத்த வரையில் தனியாகக் கண்காணிப்பு இருந்தால் தான் அவைகள் சீர்கெடாமல் இருக்கும். பொறியியல் துறையில் இருந்தால், அந்தப் பொறியாளர்கள் வேறு பல அலுவல்களை கவனிக்கவேண்டியிருக்கிறது ; அதோடு சேர்ந்து இந்த வேலைகளையும் கவனிக்க வேண்டியிருக்கும். 1963-ம் ஆண்டு அமைக்கப்பட்ட இந்தப் பொறியியல் பகுதியில் கட்டடப் பொறியாளர், உதவிப் பொறியாளர், ஜூனியர் பொறியாளர், கலைஞர் வல்லுனர் இருந்தும், ஒரு ஆண்டில் அவர்கள் 76 கோவில்களைத் தான் கவனிக்க முடிந்திருக்கிறது. எட்டா யிரத்துச் சில்லரை கோவில்கள் இருக்கின்றன. நல்ல முறையில் பழுது பார்க்கப்படாவிட்டால், பழம் பெரும் கோவில்களெல்லாம் பழுதடைந்து விழுந்துவிடும். உதாரணமாக, கங்கைகொண்ட சோழபுரத்தில் ராஜேந்தி ரன் கட்டிய கோவில் சீர்படுத்தப்படாத காரணத்தினால், அது விழுந்து போயிற்று. அந்தமாதிரியான கோவில்களைச் சீர்படுத்த என்னென்ன செய்யவேண்டுமென்று கண்டறிந்து கூறி, செலவுகளை வரையறுத்துக் கூற

அதிலேயே நாட்டம் கொண்ட பகுதி இருந்தால்தான் இந்த வேலைகள் செம்மையான முறையில் நடைபெற முடியும். பொதுப்பணித் துறையில் இந்தப் பொறுப்பை விட்டால், அது அந்த அளவுக்கு நடைபெறாது என்று தான் இப்போது தனியாக ஏற்படுத்தப்பட்டிருக்கிறது.

கல்வி கமிஷன் பரிந்துரைகள்.

* 326 வினா.—**திரு. என். மருதாசலம் :** மதிப்பிற்குரிய கல்வி–தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

கல்வி கமிஷன் சிபார்சின் அடிப்படையில் மாநில ரீதியில் ஆரம்பக் கல்விக்குச் சம்பந்தப்பட்ட எல்லா விஷயங்களைப் பற்றியும் விவாதித்து முடிவெடுப்பதற்கு ஆசிரிய சங்கங்களின் பிரதிநிதிகளும், அரசாங்க அதிகாரிகளும், கல்வி நிபுணர்களும் சமபங்காகக் கொண்ட கல்விக் கூட்டுக் குழுக்களை அமைப்பது குறித்து அரசாங்கம் எடுத்துள்ள நடவடிக்கைகள் யாவை ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தமிழ்நாட்டைப் பொறுத்த வரை கல்வி கமிஷன் பரிந்துரைத்திருப்பது போன்ற கல்விக் கூட்டுக் குழுக்களை அமைக்க வேண்டிய அவசியம் இல்லை என இந்த அரசு கருதுகிறது. ஆகவே, அரசு அந்த சிபாரிசை ஏற்றுக் கொள்ளும் நிலையிலில்லை.

திரு. என். மருதாசலம் : ஸார், நம் மாநிலத்திலே கல்விக் கமிஷன் சிபாரிசுப்படி, கல்வி சம்பந்தப்பட்ட எல்லா விஷயங்களையும் ஆராய கல்விக் கமிஷன் ஒன்றை நம் மாநிலத்தில் ஏற்படுத்தினால் கல்வியின் தரம் உயரும், அதனால் கல்வி ஆசிரியர்களுக்கும் ஒரு உற்சாகம் ஏற்படும் என்று அரசு கருதுகிறதா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, கோத்தாரிக் கமிஷன் இப்படிப்பட்ட ஒரு சிபாரிசு செய்திருக்கிறது, செய்யலாம் என்று. ஆசிரியர்களின் பிரதிநிதிகள், அரசாங்க அதிகாரிகளின் பிரதிநிதிகள் கொண்ட கமிட்டி போட்டு, அதற்கு கல்வித்துறைச் செயலாளர் செயலாளராக இருந்து நடத்துவது என்று சிபாரிசு செய்திருக்கிறது. அப்படி அமைப்பதன் மூலமாக ஏற்படும் நன்மையை விட, இப்போது இருக்கிற முறையில் அதிக நன்மை ஏற்படக் கூடும். கல்வித் துறையில் அதிகார பூர்வமான சங்கங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. தலைமை ஆசிரியர்கள் சங்கம், சவுத் இண்டியன் டீச்சர்ஸ் கில்ட் போன்ற பல்வேறு சங்கங்கள் தனித்தனியாக ஆராய்ந்து, சிபாரிசுகளை வழங்கி, அவைகளின் மீது தக்க முடிவு எடுக்க இப்போது இருக்கிற அமைப்பே நடைமுறைக்கு உகந்ததாக இருக்கிறது. இதற்காக ஒரு குழு அமைத்தால், பிரதிநிதிகள் ஒரு சிலர் தாம் இடம் பெறக் கூடும். அதிகாரிகளில் ஒருசிலர்தான் இடம் பெறக்கூடும். கல்வித் துறை செயலாளர் அந்தக் குழுவுக்குச் செயலாளராக இருப்பதால், அவரும் சேர்ந்து ஒரு முடிவு எடுக்கும் நிலைமை இருக்கிறது. அந்த முடிவு அரசுக்கு வரும்போது, அமைச்சரவைக்கு வரும்போது அந்தச் செயலாளர் தான் ஆராயவேண்டும். அவரும் இருந்து அங்கே செய்த முடிவை அவரே இங்கு ஆராய வேண்டியிருக்கிறது. அப்படிப்பட்ட இடர்பாடுகள் இருப்பதால், இப்போது இருப்பதே சரியாக இருக்கும். அவர்களைக் கேட்டுச் செய்ய ஆலோசனைக்குழு இருப்பதால் கல்வியின் நிலை, கல்வி நிலயங்கள் பற்றி இப்போது இருக்கிற முறையில், அடிப்படையில் பணியாற்றுவது வசதியாக இருக்கும் என்று இந்த அரசு கருதுகிறது.

Neighbourhood schools

* 327 *Q.*—THIRU K. VINAYAKAM: Will the Hon. the Minister for Education and Industries be pleased to state—

(*a*) whether the Government are contemplating to start "Neighbourhood schools" under which rich and poor students would have to study in the same schools since all schools would have the same basic facilities and standards ; and